# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## க.பொ.த உயர்தர மாதிரிப் பரீட்சை 2020 - 01

## இந்துநாகரிகம்

சுட்டெண் : ...............                                        நேரம் : 2.00 மணித்தியாலம்

### பகுதி I

01) வேதங்கள் சாதாரண மனிதரினால் ஆக்கப்படாதது என்பதனால் வழங்கப்படும் பெயர்?
1. எழுதாமறை    2. எழுதாக்கிளவி    3. ஆம்நேயம்    4. சுயம்பு    5. அபௌருஷேயம்

02) பிரபஞ்ச உற்பத்தி, பிரபஞ்சப் படைப்புக்கு முற்பட்ட நிலை, படைப்பின் மூலாதாரம் பற்றிய விடயங்களை குறிப்பிடும் வேதத்தின் பகுதி?
1. வருணசூக்தம்    2. நாஸதீய சூக்தம்    3. ஜமசூக்தம்    4. புருஷசூக்தம்
5. பிரமச்சரிய சூக்தம்

03) ஆகமங்கள் கூறும் உருவவழிபாட்டின் அடிப்படையில் "ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி............" என்று பாடியவர்?
1. மாணிக்கவாசகர்    2. திருநாவுக்கரசர்    3. திருஞானசம்பந்தர்    4. சுந்தரமூர்த்திநாயனார்
5. காரைக்காலம்மையார்

04) சிவாகமங்கள் குறிப்பிடும் கிரியைகளில் கர்ஷனம் என்பது?
1. ஆலயங்களில் திருவுருவங்களை நிறுவுதல்
2. ஆலயங்களில் நடைபெறும் திருவிழா
3. குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை
4. ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தை பண்படுத்தல்
5. கும்பாபிஷேகக்கிரியை

05) இந்திய சிற்பக்கலை இந்தியாவிற்கே உரியது என்று குறிப்பிடும் சிந்துவெளிகால அகழ்வாராட்சியாளர்
1. சோ.ஜோன். மார்ஷல்    2. மா.இராசமாணிக்கனார்    3. வில்லியம்ஜோம்ஸ்    4. ஆலெக்சாண்டர்
5. அறிஞர் மாக்கோ

06) வேதப்பிரிவுகளில் பிராமணம் எனப்படுவது?
1. மந்திரங்களின் தொகுப்பு
2. வேள்விக்கிரியைகளின் விதிகளை விளக்குவது
3. வனப்பிரஸ்தருக்குரிய சமய அனுட்டானங்களைக் கூறுவது
4. உண்மைப்பொருள் பற்றிய விசாரணையைக் கொண்டன
5. இசைப்பாடல்களைக் கொண்டது

07) பின்வரும் ஆகமங்களில் வைஷ்ணவ ஆகமங்களைக் கொண்ட தொகுதி?

1. சகஸ்திய சங்கிதை, ஈஸ்வர சங்கிதை, மகாநிருவாணதந்திரம்
2. சகஸ்திய சங்கிதை, ஈஸ்வர சங்கிதை, அனிருத்த சங்கிதை
3. திரிபுரரகசியம், காசிப சங்கிதை, ஈஸ்வர சங்கிதை
4. காமகலாவிலாசம், ரௌரவம், மகுடம்
5. காமிகம், காரணம், யோகஜம்

08) பின்வரும் இலக்கியங்களில் ஒவ்வொரு அத்தியாயத்தின் தொடக்கத்திலும் “ஓம் நமோ நாராயண நமஸ்கிருதய” என்று ஆரம்பிப்பது?

1. மகாபாரதம் 2. பகவத்கீதை 3. இராமாயணம் 4. வேதாந்ததீபம் 5. வேதம்

09) மேல்வருவனவற்றுள் நண்பர் போல் அறிவுரை வழங்கும் இலக்கியம்?

1. இதிகாசங்கள் 2. புராணங்கள் 3.ஆகமங்கள் 4. வேதங்கள் 5. தர்மசாஸ்திரங்கள்

10) பாவச்செயல்கள் அதன் பிராயச்சித்தம் என்பன பற்றிக் கூறும் புராணம் ?

1. கருடபுராணம் 2. ஸ்கந்தபுராணம் 3. மார்க்கண்டேயபுராணம் 4. லிங்கபுராணம்
5. பெரியபுராணம்

11) சங்க இலக்கியங்களில் பிரமணியவழிபாட்டையும் நாட்டார் வழிபாட்டையும் இணைத்துக் கூறும் நூல்.

1. அற்புதத்திருவந்தாதி 2. பரிபாடல் 3. கலித்தொகை
4. திருமுருகாற்றுப்படை 5. மணிமேகலை

12) “ஆலமரக்கடவுள்” “கறைமிடற்றண்ணல்” போன்ற பெயர்களால் சங்க இலக்கியங்களில் சுட்டப்படும் கடவுள் ?

1. விஷ்ணு 2. முருகன் 3. சிவன் 4. வருணன் 5. இந்திரன்

13) மகேந்திரவர்மனின் ஆழ்ந்த சிவபக்தியைப் புலப்படுத்துவது?

1. குடுமியாமலைக் கல்வெட்டு சிவதோத்திரம்
2. திருச்சிராப்பள்ளி குகைக்கோயில் கல்வெட்டு
3. மண்டகப்பட்டு கல்வெட்டு
4. மாமல்லபுரக் கணேசர் கோயில் கல்வெட்டு
5. காஞ்சிக்கைலாசநாதர் கோயில்

14) பல்லவ மன்னர்களில் பூசலார் நாயனாருடன் தொடர்புபடுத்தப்படும் மன்னன்?

1. பரமேசுமன்னன் 2. மாமல்லன் 3. இரண்டாம் நரசிம்மவர்மன்
4. நந்திவர்மன் 5. சிம்மவிஷ்ணு

15) சோழர்காலத்தில் “ஈசானபண்டிதர்” “சர்சிவபண்டிதர்” போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டவர்கள்?

1. புரோகிதர்கள் 2. இராஜகுருமார்கள் 3. தோத்திரப்பாடல்களை இயற்றியோர்
4. நடனமாதுக்கள் 5. இசைவல்லுனர்கள்

16) பின்வருவோரில் தணிகைப் புராணத்தை இயற்றியவர்?

1. சிவஞானமுனிவர் 2. கமலைஞானப்பிரகாசர் 3. கச்சியப்பமுனிவர்
4. சிவக்கிரகயோகிகள் 5. உமாபதி சிவாச்சாரியார்

17) வைஷ்ணவ வழிபாட்டு மரபில் இறைவனைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் நினைத்து வழிபடும் முறை?

1. மதுரபாவம் 2. தாஸ்யபாவம் 3. சகியபாவம் 4. வாத்சல்யபாவம் 5. சகமார்க்கம்

18) துளசிதாசர் மக்களின் ஒழுக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் ஸ்ரீராமனிடம் முறையிட்டு எழுதிய நூல்

1. இராமசரித மானஸ் 2. சிரசந்தீபனி 3. விநய பத்திரிகா
4. கிருஸ்ண கீதாவளி 5. கலிதாவளி

19) பிரமசமாயப் பணிகளில் உடன்கட்டை ஏறுதல் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு

1. கி.பி 1840 2. கி.பி 1820 3. கி.பி 1828 4. கி.பி 1829 5. கி.பி 1815

20) மதம் மாறியவர்களை இந்துசமயத்தில் சேர்த்திட சுத்தி எனும் இயக்கத்தையும் இந்துக்களை ஒன்று திரட்ட சங்கடனம் என்ற இயக்கத்தையும் ஸ்தாபித்த சீர்திருத்தவாதி ?

1. இராமகிருஷ்ணர் 2. சுவாமி விவேகானந்தர் 3. தயானந்த சரஸ்வதி
4. இராஜாராம் மோகன்ராய் 5. ஆறுமுகநாவலர்

21) மானாபரணனின் அரண்மனையில் வேதங்களில் வல்ல புரோகிதர்கள் ஓமம் வளர்த்து யாகம் செய்தார்கள் என்று குறிப்பிடும் நூல்?

1. மகாவம்சம் 2. தீபவம்சம் 3. சூளவம்சம் 4. பூவைவிடுதூது 5. தட்சிணகைலாயபுராணம்

22) மேல்வருவனவற்றுள் ஆரியச்சக்கரவர்த்தி காலத்தில் எழுந்த சமயம் சார்பான நூல்களைக் கொண்ட தொகுதி?

1. கைலாயமாலை, இரகுவம்சம் , சரசோதிமாலை
2. கதிரைமலைப்பள்ளு, இரகுவம்சம், செகராசசேகரமாலை
3. கண்ணகி வழக்குரை, கோணேசர்கல்வெட்டு, செகராசசேகரமாலை
4. தட்சிணகைலாசபுராணம் , செகராசசேகரமாலை , திருக்கரசைப்புராணம்
5. கோணேசர்கல்வெட்டு , இரகுவம்சம் , கதிரைமலைப்பள்ளு

23) பின்வரும் கோயில்களில் தைப்பூசத்திருநாள் சிறப்பாக நடைபெறும் கீழைத்தேசத்து முருகன் ஆலயம்?

1. பத்துமலைக் கோயில் 2. பத்திரேஸ்வரர் கோயில் 3. வாட்போகோயில்
4. அங்கோவாட்சிவாலயம் 5. பிரம்பனார்கோயில்

24) ஜாவாவில் சிவநெறி தழுவி ஆயிரம் அந்தணர்களுக்கு தானம் வழங்கிய மன்னன்?

1. சூரியவர்மன் 2. பூரணவர்மன் 3. யசோவருமன் 4. ஈஸ்வரவர்மன் 5. பவவர்மன்

25) கலை உருவாக்கம் என்பது தூய உளச் செயற்பாடு என்று கூறியவர்?

1. ம.இராசமாணிக்கனார் 2. கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி 3. சுவாமிவிபுலானந்தர்
4. அபிநவகுப்தர் 5. கைலாசநாதக்குருக்கள்

26) நவராத்திரி காலத்தில் ஸ்ரீ சக்கரபூசை சிறப்பாக நடைபெறும் ஈழத்து ஆலயம்?

1. திருக்கேதீஸ்வரம் 2. முன்னேஸ்வரம் 3. திருக்கோணேஸ்வரம்
4. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் 5. நகுலேஸ்வரம்

27) ஈழத்து இந்துசமய வளர்ச்சியில் பங்காற்றியவர்களில் கிறிஸ்தவ கண்டன குடாரி என்று போற்றப்படுபவர்?

1. குா. அருணாசலதேசிகர் 2. ஆறுமுகநாவலர் 3. சுவாமி விபுலானந்தர்
4. நூா. கதிரவேற்பிள்ளை 5. காசிவாசி செந்திநாதையர்

28) உயர்பிரமம் ஒன்றே அதற்கப்பால் ஒன்றுமில்லை என்று குறிப்பிடும் உபநிடதம்?
1. பிருகதாரண்யஉபநிடதம் 2. பிரச்சின்ன உபநிடதம் 3. முண்டகஉபநிடதம்
4. சாந்தோக்கிய உபநிடதம் 5. கட உபநிடதம்

29) அத்துவைதக் கோட்பாட்டின் திறவுகோலாக அமையும் நூல்?
1. மாண்டுக்கிய காரியை 2. பிரம்மசூத்திரம் 3. ஸ்ரீபாலியம் 4. சாரிகாசூத்திரம் 5. விவேகசூடாமணி

30) சைவசித்தாந்த சாஸ்திரங்களில் சிவஞானபோத பிரமாண இயல் விளக்குவது?
1. முப்பொருளின் பொது இயல்பு
2. இறைவனை அடைவோர் பெறும் பேறு
3. உயிர்கள் இறைவனை அடையும் வழி
4. முப்பொருளின் சிறப்பியல்பு
5. பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்டு என்பதற்கான ஏதுக்கள்

31) இறைவனின் எண்குணங்களில் சத், சித், ஆனந்தம் என்னும் இயல்பில் சத்தில் அடங்குவது?
1. தூய உடம்பினாதல்
2. இயற்கை உணர்வினனாதல்
3. முற்றுமுணர்தல்
4. தன்வயத்தவனாதல்
5. பேரருளுடைமை

32) ஆன்மாக்களை பந்திக்கும் மலங்களில் ஆகந்துக மலங்கள் என அழைக்கப்படுவது?
1. ஆணவம், மாயை 2. கன்மம், மாயை 3. ஆணவம், கன்மம்
4. சுத்தமாயை, அசுத்தமாயை 5. ஆணவம், கன்மம், மாயை

33) ஆசாரமே மேலான தர்மம் என்று கூறும் நூல்?
1. மகாபாரதம் 2. மனுஸ்மிருதி 3. பகவத்கீதை 4. வேதம் 5. சிலப்பதிகாரம்

34) "கல்வியிற் கரையிலாத காஞ்சி" மாநகர் என்று காஞ்சியில் கல்வி சிறப்புற்றிருந்தது என்று குறிப்பிடும் நாயனார்?
1. திருநாவுக்கரசர் 2. திருஞானசம்பந்தர் 3. மாணிக்கவாசகர்
4. சுந்தரர் 5. காரைக்காலம்மையார்

35) பண்டைய வானியல் கோட்பாடுகளில் சூரியக்கோட்பாடு கூறும் விடயமாக அமைவது?
1. கிரகங்களின் அசைவு
2. நீள்வட்டப்பாதை பற்றிய விபரம்
3. நட்சத்திரங்களின் தோற்றம்
4. வருடம் 365 நாட்களைக் கொண்டது
5. சந்திரனின் தோற்றம், மறைவு

36) சந்தானமணி என்ற சோதிட நூலை எழுதியவர்?
1. இடைக்காடர் 2. சபாபதிசோதிடர் 3. சரகர் 4. இராமலிங்கமுனிவர் 5. போசராசபண்டிதர்

37) இருக்கு வேதத்தில் வாதம், பித்தம், கபம் என்ற மூன்றையும் திரிதாது எனக் குறிப்பிடும் சூக்தம்
1. வருணசூக்தம் 2. முனிசூக்தம் 3. ஒஷதிசூக்தம் 4. பேஷயானிசூக்தம்
5. அயுஷ்யானி சூக்தம்

38) வான்மீகி இராமாயணத்தில் குறிப்பிடப்படும் விசல்ய கரணி எனும் மூலிகை
1. இறந்தவரை பிழைக்க வைக்கும் தன்மை கொண்டது
2. காயத்தைக் குணப்படுத்தும் தன்மை கொண்டது
3. எலும்பு முறிவு கிழிந்த தசையை குணப்படுத்தும் தன்மை கொண்டது
4. தீக்காயத்தை குணப்படுத்தும்
5. கபால வியாதியை போக்கவல்லது

39) கட்டுத்தளி ஆலயம் என்பது
1. சிறிய தேவ கோட்டம் கொண்ட கோயில்
2. கோபுரத்தோடு கூடிய கோயில்
3. தேர் போன்று வடிவமைக்கப்பட்டது
4. கற்களை ஒன்றின் மேல் ஒன்றாக வைத்துக் கட்டும் ஆலய அமைப்பு
5. குடை போன்று வடிவமைக்கப்பட்டவை

40) விஜய நகர நாயக்கர் காலத்தில் சந்தத் தமிழிசையில் பாடப் பாடி முருக பக்தியை புத்தெழுச்சி பெறச் செய்தவர்
1. குமரகுருபரர் 2. அருணகிரிநாதர் 3. அபிராமிப்பட்டர் 4. தாயுமானவர் சுவாமிகள்
5. திரிகூடராசப்பக்கவிராஜர்

**41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்கு பொருத்தமானவற்றை பின்வரும் அட்டவணையின் i, ii, iii, iv ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க**

| i | ii | iii | iv |
|---|---|---|---|
| A<br>சங்கமருவிய காலம் | F<br>இலக்கண இயல் | K<br>வேதாந்த சாரம் | P<br>பலம் |
| B<br>சமன்வயம் | G<br>திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் | L<br>அற்புதத் திருவந்தாதி | Q<br>சைவசமய சிந்தாமணி |
| C<br>பிரமாண இயல் | H<br>பிரசங்கம் | M<br>சைவசமய ஆரம்ப போசனி | R<br>பயனியல் |
| D<br>ஸ்ரீபாசியம் | I<br>அவிரோதம் | N<br>சாதனம் | S<br>தர்ம பூதஞானம் |
| E<br>சைவசித்தாந்தமணி | J<br>பிரபக்தி | O<br>சாதனஇயல். | T<br>திருவிரட்டை மணிமாலை |

41) உத்தர மீமாஞ்சை எனும் தத்துவ நூலோடு தொடர்புடையவை
1. CDOP 2. CFOR 3. BINP 4. BINR 5. BFNP

42) மெய்கண்ட தேவரோடு தொடர்புடையவை
1. BINR 2. CINR 3. EINQ 4. BIOR 5. CFOR

43) சைவப்புலவர் கா. அருணாசலதேசிகருடன் தொடர்புடையதாக அமையும் தொகுதி
1. AHMQ 2. EHLT 3. EGMT 4. EHMQ 5. EGLT

44) சைவ சமயத்திற்கு வித்திட்டவருடன் தொடர்பான தொகுதி
1. AGLQ 2. CHMT 3. AQLT 4. DGLS 5. EHMQ

45) வைஷ்ணவ சித்தாந்தத்தை எழுதியவருடன் தொடர்புடைய தொகுதி
1. DJKS 2. DINS 3. BJKS 4. EJKP 5. DJNS

**46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாதது**

46) இராமகிருஸ்ண பரமஹம்சர்
1. வேதாந்தக் கோட்பாட்டை நடைமுறை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திக் காட்டியவர்.
2. சாக்த சமயப் பக்தர்
3. எல்லாச் சமயங்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் இறை உண்மையை எடுத்துக்காட்டுகின்றன என்பதைத் தமது அனுபவங்களாக உணர்த்தியவர்.
4. விவேகானந்தரை சீடராக ஏற்றார்.
5. வேதாந்த சூத்திரத்தை மொழிபெயர்த்தார்.

47) மீராபாய்
1. இந்து இஸ்லாமிய ஒற்றுமையை வெளிப்படுத்தும் பாடல்களை அதிகம் பாடியுள்ளார்.
2. சமயக் கருத்துக்களை விளக்கும் வகையில் தாசபோதம், சத்போதம், ஆனந்த புவனம் போன்ற நூல்களை எழுதினார்.
3. பிரபக்தியை மதுர பாவனையில் வெளிப்படுத்தினார்.
4. 1547இல் இறைவனடி சேர்ந்தார்.
5. தத்துவக் கருத்துக்களை விளக்க சத்போதம் எனும் நூலை எழுதினார்.

48) பல்லவர் ஆட்சியில்
1. வேதாகம மரபுகள் பரவின
2. அரண்மனைகளில் சமயச்சடங்குகள் மேலோங்கின.
3. மன்னர்கள் வேதாகம மரபைப் பேண மக்களும் சைவசமயச் சார்புடையவர்களாயினர்.
4. நடராஜர் அரசர்களது சின்னமாகியது.
5. வடமொழிக் கல்வி பரவி வேள்விக் கிராமங்கள் உருவாகின.

49) பிரம சமாயப் பணிகளில்
1. 1840 உருவ வழிபாட்டை எதிர்த்து துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டது.
2. 1815 ஆத்மீக சபை நிறுவியது.
3. இந்துப்பண்பாட்டு உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டது.
4. 1875 பிரமசமாயம் ஸ்தாபிக்கப்பட்டது.
5. 1823 பிராமணம் எனும் சஞ்சிகை வெளியிடப்பட்டது.

50) மரபு வழி ஊடகங்கள்
1. ஓலைச்சுவடிகள், அழைப்பு ஓலைகள்
2. பொதுக்கூட்டம்.
3. நாட்டுப்புறப்பாடல்
4. முரசறைதல் மூலம் அறிவித்தல்.
5. பக்திப்பாடல்கள்

# புள்ளித்திட்டம்

1. 5
2. 2
3. 1
4. 4
5. 1
6. 2
7. 2
8. 1
9. 2
10. 1
11. 4
12. 3
13. 1
14. 3
15. 2
16. 3
17. 1
18. 3
19. 4
20. 3
21. 1
22. 5
23. 1
24. 2
25. 2
26. 3
27. 5
28. 2
29. 1
30. 5
31. 4
32. 2
33. 2
34. 1
35. 1
36. 2
37. 3
38. 2
39. 4
40. 2
41. 3
42. 5
43. 4
44. 4
45. 1
46. 5
47. 1
48. 4
49. 4
50. 2